DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.125/2025

PW - 7

| | | |
|---|---|---|
| Name | : | பிரியா (Lw - 8 ) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 07.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், மொளசி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

நான் கடந்த 2023 முதல் 2025 வரை சேந்தமங்கலம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 18.10.2024ம் தேதி மாலை 18.30 மணிக்கு சேந்தமங்கலம் காவல் நிலையத்தில் முன்னதாக 08.10.2024ம் தேதி சுகன்யா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் மனு ரசீது எண். 398/2024 ன் கீழான மனு ரசீதின் பேரில் நிலைய குற்ற எண் 230/2024 BNS சட்டப்பிரிவுகள் 329(4), 78(2) உ/இ 4 of TNPHW ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகல் எனது புலன் விசாரணக்காக பார்வைக்கு வைக்கப்பட்டது.

மேற்படி வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 19.10.2024ம் தேதி காலை 09.00 மணிக்க சம்பவ இடமான சேந்தமங்கலம் கனரா வங்கிக்கு சென்று சாட்சிகள் சதிஷ், சாந்தகுமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.

(மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது) பின்பு சாட்சிகள் சுகன்யா, கௌதம், மனோஜ்குமார், வினோத், சதிஷ் மற்றும் சாந்தகுமார் ஆகீயோரை விசாரித்து தனி தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் கைது நடவடிக்கை தேவையில்லை என்பதால் எதிரி சேகருக்கு BNSS பிரிவு 35(3) ன் கீழ் விசாரணைக்கு ஆஜராகுமாறு அறிவிப்பு வழங்கினேன். பின்பு வழக்கினை மேல் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திரு. தமிழ்குமரன் அவர்களின் பார்வைக்க வைத்தேன். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் திரு. தமிழ்குமரன் என்னை விசாரித்தார்.

<u>எதிரி **தரப்பு குறுக்கு விசாரணை-**</u>

வாதி மற்றும் மற்ற சாட்சிகள் தங்களது விசாரணையின் போது சம்பவத்திற்கு முன்னர் அடிக்கடி எதிரி வாதிக்கு தொந்தரவு தந்து வருகிறார் என கூறியுள்ள நிலையில் எதிரி எந்தெந்த தேதியில் வாதிக்கு தொந்தரவு தந்தார் என்பதை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். தற்போது என்னிடம் அது பற்றிய தரவுகள் இல்லை. நான் அவ்வாறு விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றாலும் வாதியும் மற்ற சாட்சிகளும் அவ்வாறு எதுவும் கூறவில்லை என்றாலும் அவ்வாறு கூறி இருந்தால் நான் பதிவு செய்த BNSS பிரிவு 180 வாக்குமூலத்தில் பதிவு செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

சம்பவயிடமானது அரசு கனரா வங்கி என்பதால் சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் சிசிடிவி பதிவுகளை வாதி தரப்பில் விசாரணைக்கு கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. எனது விசாரணையின் போது சம்பவ இடமான கனரா வங்கியின் சிசிடிவி பதிவுகளை வாதி தரப்பில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த போது உடன் இருந்ததாக சொல்லப்படும் புகார் தாரரின் சகோதரடிமோ அல்லது வாதியின் குடும்பத்தினரிடமோ சம்பவம் குறித்து விசாரித்துதெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நேரடி சாட்சிகள் இருந்ததால் விசாரிக்கவில்லை. எதிரி எந்த எந்த வங்கிகளில் வங்கி கணக்கு வைத்துள்ளார் என்பது குறித்து விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

எனது விசாரணையின் போது வாதி தானும் எதிரியும் பழகி வந்ததாகவும் எதிரி தனக்கு தெரிந்த நபர் என்பது பற்றியும் வாதிக்கும் எதிரிக்கும் திருமண பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன என்பது குறித்தும் கூறவில்லை என்றால் தெரிந்தவர் என கூறினார் திருமண பேச்சு வார்த்தைகள் நடைபெற்றது பற்றி எதுவும் கூறவில்லை.

அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் கனரா வங்கியில் வேலை செய்து வருவதாக கூறியுள்ள நிலையில் அது பற்றிய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

சம்பவம் நேரம் மற்றும் சம்பவத்தின் போது சம்பவ இடத்தில் வங்கியின் வாடிக்கையாளர்கள் இருந்தார்களா என்பது பற்றி நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. சம்பவமானது மதியம் நேரத்தில் நடைபெற்றது என்றும் வாடிக்கையாளர்கள் இருந்தார்கள் எனவும் தெரிந்து கொண்டேன். வழக்காவணங்களில் சம்பவமானது மதிய நேரத்தில் நடந்தது என குறிப்பிடவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

வாடிக்கையாளர்கள் யார் யார் இருந்தார்கள் என விசாரித்து தெரிந்து கொள்ளதாலும் அவர்களை சாட்சியாக சேர்க்காததால் நான் இவ்வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார் கொடுக்க ஏற்பட்ட காலதாமதம் குறித்து வாதி எதுவும் குறிப்பிட்டு கூறாததால் மேற்படி புகாரானது பொய்யான புகார் என்றால் சரியல்ல. வாதி கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் சம்பவ இடம்செல்லாமல் சரிவர புலன் விசாரணை செய்யாமல் வழக்கின் ஆவணங்களை காவல் நிலையத்திலேயே தயாரித்து விட்டு சம்பவயிடத்தில் வைத்து தயாரித்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**